# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை 10. Ph. 0452 - 4354302*

## இரட்சிப்பின் வழி

### முன்னுரை :

இவ்வுலகில், அதுவும் குறிப்பாக வேதத்தைப் பயிலும் ஓர் சீரிய மாணாக்கனுக்கு இரட்சிப்பின் வழியை முழுமையாக அறிந்து கொள்வதைவிட மிக முக்கியமானது வேறு ஒன்றும் இல்லை.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

நூற்றுக்கணக்கான திருச்சபை பிரிவுகளும், ஆயிரக்கணக்கான மதங்களும் இந்த உலகில் சத்தியத்தையும், இரட்சிப்பின் வழியையும் உடையவைகளாகத் தங்களைச் சொல்லிக் கொள்கின்றன.

பரிசுத்த வேதாகமத்திலுள்ள எந்த ஒரு பாடமும் தெளிவில்லாமல் இல்லை. எனினும், சாத்தான் சுவிசேஷத்திற்கு மனிதனைக் குருடாக்க எத்தனிப்பதால் இந்தப் பொருளைப்பற்றி மிகுந்த குழப்பம் இருந்து வருகிறது (2 கொரிந்தியர் 4:4). இப்படியிருக்க இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் இப்பொருளைப்பற்றி முற்றிலும் தெளிவாக்க வேண்டிய மாபெரும் தேவையின் அடிப்படையில் எழுந்ததாகும்.

இரட்சிப்பின் வழியை அறிவது என்பது, ஆசீர்வாதத்தின் நிச்சயத்துடன், நம் இருதயங்களில் பரலோகத்தைப்பற்றிய நம்பிக்கையை நாம் அனுபவிப்பதாகும். நீங்களும் விசுவாசத்தினால் இந்த மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக, இந்தப் பாடத்தை முற்றிலும் புரிந்து, உணர்ந்து பற்றிக் கொள்ள ஆண்டவர்தாமே உங்களுக்கு உதவி செய்வாராக.

### இரட்சிப்பின் வழியில் ஆறு தெளிவான படிகள் உள்ளன

**1. மறுப்பின்றி ஒப்புக்கொள்ளுதல் :**

அ. தேவன் நம்மைக் காண்பதுபோல் நம்மை நாம் உள்ளவாறே, உண்மை நிலையை மறுப்பின்றி ஒப்புக்கொள்ளும்போது மட்டுமே இரட்சிப்பின் வழி தொடக்கம் பெறுகிறது.

ஆ. இது நடைபெறாதவரை பரலோகம் அல்லது நித்தியவாழ்வு பற்றி நம்பிக்கை இல்லை.

எடுத்துக்காட்டாக :

1. ஒருவன் தான் காணாமற்போனதை ஒப்புக்கொள்ளாதவரை தான் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றிய கரிசனை இருக்காது.
2. ஒருவனும் தன் அசுத்தத்தை உணராதவரை அவன் கழுவப்படவேண்டும் என விரும்பமாட்டான்.

இ. மனிதர், தேவன் தங்களைக் காண்பதுபோல் காண மறுப்பதாலேயே பின்வருமாறு கூறுகிறார்கள்:

1. நான் அவனைப்போல நல்லவனாகவே வாழ்கிறேன்.
2. நான் என்னிலே போதிய அளவு நல்லவன்தான்.
3. நான் நன்றாகத்தான் இருக்கிறேன். எனவே எனக்கு எதுவும் தேவையில்லை.
4. நான் என்னால் முடிந்த அளவுக்கு நல்லதைச் செய்வதால் அதுவே எனக்குப் போதும்.
5. என்னைவிட மிகவும் மோசமானவர்களைக் குறித்து நான் அறிவேன்.
6. திருமறை என்னைச் சுட்டிக்காட்டுவது போல நான் அவ்வளவு கெட்டவன் அல்ல.
7. நான் நல்ல தங்கமான விதிமுறைகளைக் காத்து நடக்க முயற்சிக்கிறேன்.

ஈ. ஆனால், தேவன் நம்மைப் பற்றி என்ன கூறுகிறார்?

1. நாம் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம் (ஏசாயா 64:6).
2. நம்முடைய இருதயம் திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது (எரேமியா 17:9).
3. நீதிமான் ஒருவனாகிலுமில்லை. எல்லோரும் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை (ரோமர் 3:10–12).

4. எல்லோரும் இழந்துபோனவர்கள் (லூக்கா 19:10). ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டவர்கள் (யோவான் 3:18). அந்நியர்கள் (எபேசியர் 4:18).
5. எல்லோரும் பாவஞ்செய்து தேவமகிமை அற்றவர்களானோம் (ரோமர் 3:23).

உ. வேதாகமத்தில் உள்ள தலைவர்கள் தங்களை எப்படிக் கண்டார்கள்?

1. தாவீது .. இதோ, நான் துர்க்குணத்திலே உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (சங்கீதம் 51:5).
2. ஏசாயா .. நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன். அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவே வாசமாயிருக்கிறவன் (ஏசாயா 6:5).
3. எரேமியா .. எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது (எரேமியா 17:9).
4. பவுல் .. பாவிகளில் பிரதான பாவி நான் (1 தீமோத்தேயு 1:15).
5. பேதுரு .. ஆண்டவரே, நான் பாவியான மனுஷன். நீர் என்னை விட்டுப் போகவேண்டும் (லூக்கா 5:8).

இப்படியாக இரட்சிப்பின் வழி நம்மை நாம் உள்ளபடியே மறுப்பின்றி ஒப்புக்கொள்வதில் தானே தொடக்கம் பெறுகிறது. ஏனெனில், தேவன் நம்மைக் காணும் விதத்தில் நாம் நம்மைக் கண்டு, வேதம் நம்மைப்பற்றி சொல்வதை ஏற்றுக்கொள்ளும்போது மட்டுமே நாம் ஆண்டவரையும், அவருடைய மகத்தான இரட்சிப்பையும் அறிந்துகொள்ள முடியும். திருமறையில் உள்ள தலைவர்களே தங்களைப் பாவிகள் என மறுப்பின்றி ஒப்புக்கொண்டார்கள் என்றால், நாமும் நம்மைத் தாழ்த்தி அதே போல் செய்யவேண்டாமா?

## 2. மனந்திரும்புதல் :

அ. 'மனந்திரும்புதல்' என்பதன் அர்த்தம் :

1. இது "METANOEO" என்ற கிரேக்க வினைச்சொல்லின் மொழிபெயர்ப்பு ஆகும். இதன் பொருள் "பின்நோக்கிப் பார்" அல்லது, "மனதை அல்லது நோக்கத்தை மாற்று" என்பதாகும்.
2. "METANOIA" என்ற கிரேக்க பெயர்ச்சொல்லும் "பின்–நினைவு" அல்லது "மனமாற்றம்" என்பதையே குறிக்கும்.
3. இவ்விரண்டு நிலையிலும், புதிய ஏற்பாட்டில் பெரும்பாலும் எப்போதுமே, நல்ல நிலைக்கு மாறுதல் அல்லது பாவம், தீமை இவற்றிலிருந்து திரும்புதல் என்ற பொருளிலேதான் இது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. ஆக, இதுவே இரட்சிப்பின் வழிக்கு இரண்டாவது படியாக முறைப்படி அமைகிறது. முதலாவது தேவன் நம்மைக் காணும் வண்ணம் நாம் நம்மைக் காணவேண்டும். பிறகு நம் நிலையை உள்ளவாறே அறிக்கையிட்டு அதனின்று மனந்திரும்ப வேண்டும்.

இ. தேவன் நாம் மனந்திரும்ப வேண்டும் என கட்டளையிடுகிறார் :

1. லூக்கா 13:3 "... நீங்கள் மனந்திரும்பாமற்போனால் . . . . . அப்படியே கெட்டுப்போவீர்கள்."
2. அப்போஸ்தலர் 17:30 "... மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்."
3. எனவே, மனந்திரும்புதல் என்பது ஏதோ நாம் அறியாமல் நிராகரித்து, தவறவிட்டு கடத்திவிடக் கூடாத ஒன்றாகும். இதைச் செய்யத் தவறுதல் என்பது நாம் பாவத்திலே முற்றிலும் அழிந்து நாசமடைவதற்கே வழிவகுப்பதாகும்.

ஈ. தேவன் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என கட்டளையிடுகிறார் :

1. சிலர் மற்றவர்களைவிட தாங்கள் நன்நெறியுடைய உத்தமர்களாக எண்ணி, மனந்திரும்ப வேண்டிய அவசியத்திற்கு மேலானவர்களாகத் தங்களை நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.
2. ஆனால், வேதாகமம் சொல்கிறது :
   1. அப்படியல்லவென்று சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் (லூக்கா 13:3). (இந்த வசனம் சொல்லப்பட்ட சூழ்நிலையை கவனிக்கவும்).
   2. இப்பொழுதோ எங்குமுள்ள எல்லா மனுஷரும் மனந்திரும்பவேண்டு மென்று கட்டளையிடுகிறார் (அப்போஸ்தலர் 17:30).
   3. எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி ... (2 பேதுரு 3:9).

உ. மனந்திரும்புதல், விசுவாசம் இவை இரண்டும் தேவை.

மனந்திரும்புதல் மட்டும் நம்மை இரட்சித்து, பாவமன்னிப்பாகிய பலனை நமக்குத் தரமுடியாது. எனவே இரட்சிப்பின் திட்டத்தில், இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் திட்டவட்டமான ஒரு பகுதியாக தேவனால் எதிர் பார்க்கப்படுகிறது.

1. அப்போஸ்தலர் 2:41 .. விசுவாசத்தினால் அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டனர்.
2. அப்போஸ்தலர் 3:20 .. விசுவாசத்தினால் குணப்படுதல் ஏற்படுகிறது.
3. அப்போஸ்தலர் 20:21 .. தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் பவுல் பிரசங்கித்தார்.

ஊ. உண்மையான மனந்திரும்புதல் நம் மனம், உணர்ச்சிகள், சித்தம் இவைகளில் ஏற்படும் மாற்றம் ஆகும்.

**I. மனம் அல்லது அறிவாற்றல் தொடர்பான விளக்கம் :**

அப்போஸ்தலர் 2:14–40 .. பேதுரு யூதர்களை மனந்திரும்ப அழைக்கும் போது, இயேசுவைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த மனநிலையை மாற்றிக்கொள்ளும்படி கேட்கிறான். அவர்கள் அவரை தேவதூஷணம் சொல்லுகிறவராகவும், தன்னை தேவன் என்று தவறாகக் காட்டி ஏமாற்றுகிறவராகவும் கண்டார்கள். இப்பொழுதோ அவர்கள் மனம் மாறி அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

**II. உணர்ச்சி தொடர்பான விளக்கம் :**

அ. 2 கொரிந்தியர் 7:8–11 .. கொரிந்து மக்கள் சபையினுள் மறைந்திருந்த பாவத்தைப் பற்றி உணர்ந்தபோது, மிகுந்த துக்கம் அடைந்து மனந்திரும்பினர்

ஆ. மத்தேயு 11:21 .. இரட்டுடுத்தி சாம்பலில் இருப்பதை மனந்திரும்புதலுடன் இணைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**III. சித்தம் தொடர்பான விளக்கம் :**

1. 1 தெசலோனிக்கேயர் 1:9 .. ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு நீங்கள் விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்குமனந்திரும்பினது – சித்தத்தின் ஒரு செயல்.
2. அப்போஸ்தலர் 26:18 .. இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானின் அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு – சித்தத்தின் ஒரு செயல் இது.
3. லூக்கா 15:18–20 – இங்கு கெட்டகுமாரனின் உவமையில் மனந்திரும்புதலின் மூன்று அம்சங்களையும் காணலாம்:

| | | |
|---|---|---|
| 1. அவனுக்குப் புத்தி தெளிந்தது | .. | அறிவு |
| 2. நானோ பசியினால் சாகிறேன் | .. | துக்க உணர்ச்சி |
| 3. நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய் | .. | சித்தம் |

<u>குறிப்பு :</u>

இப்படியிருக்க, மனந்திரும்புதல் என்பது பாவத்திற்காக மனம் உடைதல் மட்டும் அல்ல. பாவத்தைவிட்டு மனம் துண்டிக்கப்படுதல் ஆகும்.

எ. மனந்திரும்புதல் நம்மில் பல வழிகளில் ஏற்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. தேவனுடைய தயவு, நற்குணம் | .. | ரோமர் 2:4 |
| 2. சுவிசேஷத்தை பிரசங்கித்தல் | .. | அப்போஸ்தலர் 2:37–41 |
| 3. தேவனுடைய கிருபை | .. | அப்போஸ்தலர் 11:18 |
| 4. தேவனுடைய நீடிய பொறுமை | .. | 2 பேதுரு 3:9 |
| 5. தேவனுடைய கடிந்துகொள்ளுதல், சிட்சை | .. | வெளி.3:19 |

**3. மனதார உணர்தல் :**

அ. ஒருவன் தன்னை, தேவன் யார் என்று சுட்டிக்காட்டுகிறாரோ அதை மறுப்பின்றி ஒப்புக்கொண்டு, மனந்திரும்பி, அவன் பாவத்தைவிட்டு தேவனிடத்திற்குத் திரும்பியதும் இரண்டு சத்தியங்களை அவன் மனதார உணர்தல் வேண்டும்.

1. மனிதன் ஒரு பாவி மட்டுமல்ல, உதவியற்ற பாவி. அவன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள முற்றிலும் சக்தியற்றவன்.
2. கிறிஸ்து ஒருவரே நம்மை நமது பாவத்திலிருந்து இரட்சிக்க முடியும், இரட்சிக்கிறார்.

ஆ. நீங்கள் மறுப்பின்றி ஒப்புக்கொள்வதற்கும், மனதார உணர்ந்து கொள்ளுவதற்கும் மாபெரும் வேறுபாடு உண்டு.

**விளக்கம் 1 –** ஒரு நோய், தன் சரீரத்தில் தோன்றுவது எவ்வாறு என்பதை மனதார உணர்ந்து கொள்ளாமலேயே, அந்நோயின் அறிகுறிகளை அவன் மறுப்பின்றி ஒப்புக்கொள்ளக்கூடும்.

**விளக்கம் 2 –** ஒருவன், ஒரு குழந்தை புறக்கணிக்கப்பட்டு, பசியுடன் காணப்படுவதை மறுப்பின்றி ஒப்புக் கொண்டும், அக்குழந்தையின் வீட்டில் உள்ள வருந்தத்தக்க சூழ்நிலையை உணராதிருக்கக் கூடும்.

இதேபோல் ஒருவன் தான் பாவி என்பதை மறுப்பின்றி ஒப்புக்கொண்டும், முற்றிலும் உதவியற்ற பாவி என்பதை மனதார உணராமல் இருக்கக்கூடும்.

இ. இப்படியிருக்க இரட்சிப்பின் வழியில் மூன்றாவது படி 'மனதார உணர்தல்' அது :

1. மனிதன் தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ள முற்றிலும் திராணியற்றவன்... அவன் இரட்சிக்கப்பட தேவனுடைய கிருபையையே முழுமையாக சார்ந்திருக்க வேண்டும்.
   1. எபேசியர் 2:8,9 .. ''கிருபையினாலே . . . இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல''
   2. தீத்து 3:5,6 .. ''நாம் செய்த நீதியின் கிரியைகளினால் அல்ல''
   3. ரோமர் 4:5 .. ''கிரியையில்லாமல் விசுவாசத்தினால்''
2. கிறிஸ்து ஒருவரே பூரணமாக நம்மை இரட்சிக்க முடியும், இரட்சிக்கிறார்.
   1. தம்மாலே தாம் நம்முடைய பாவங்களை நீக்கி.... (எபிரெயர் 1:3).
   2. அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டு வெளிப்பட்டார் (எபிரெயர் 9:26).
   3. தேவன், பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்(2 கொரிந்தியர் 5:21).
   4. கர்த்தரோ, நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (ஏசாயா 53:6).

**குறிப்பு :**

எல்லா மார்க்கமும், கிறிஸ்தவத்தையும் சேர்த்து மனிதனின் தேவையை முன்னிட்டே ஆரம்பமாகிறது. ஆனால் மற்ற மதங்கள் ''என் கைகளில் ஏதேனும் ஒன்றைக் கொண்டுவருகிறேன்'' எனக் கூறுகிறது. கிறிஸ்தவமோ, ''என் கைகளில் கொண்டுவர ஒன்றுமே இல்லை'' எனக் கூறுகிறது. மதம் மட்டுமே எனில் ''செய்'' என்பதாகும். கிறிஸ்தவம் ''செய்யப்பட்டாயிற்று'' என்பதாகும்.

**4. மாபெரும் வெளிப்பாடு :**

இரட்சிப்பின் வழியைக் கற்றறிந்து இரட்சிக்கப்பட்ட அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு நிச்சயம் வரும். என்ன வெளிப்பாடு? கிறிஸ்து மெய்யாகவே மகிமையின் தேவன். ஜீவனுள்ள தேவனின் குமாரன்.

அ. பேதுருவின் அறிக்கையைக் காண்க :

மத்தேயு 16:16, ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து.''

**கிறிஸ்துவின் பதிலைக் காண்க :** ''மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. என் பிதா இதை வெளிப்படுத்தினார்'' (மத்தேயு 16:17). தேவன் பேதுருவிற்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாட்டைத் தந்தார்.

ஆ. வேதத்தில் காணப்படும் மனந்திரும்புதல் விளக்கங்கள் :

1. **தர்சு பட்டணத்து சவுல் :** அவன், ''ஆண்டவரே நீர் யார்?'' என்று கேட்டான். அவர், ''நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார்'' (அப்போஸ்தலர் 9:5). என்ன ஒரு வெளிப்பாடு! இந்த யூத பக்திமான், பரிசேயருக்குத் தலைவன். சடுதியில் தான் வெறுக்கின்ற இயேசு கர்த்தர், மேசியா என்கிற வெளிப்பாடு கிடைக்கப் பெற்றான்.
2. **சிலுவையில் மரித்துக்கொண்டிருந்த திருடன் :** முதலில் அவனும் கிறிஸ்துவை இகழ்ந்து பேசினான் (மத்தேயு 27:44). ஆனால், அவனுக்கு வெளிப்பாடு கிடைத்ததும், ''ஆண்டவரே அடியேனை நினைத்தருளும்'' என கெஞ்சினான் (லூக்கா 23:42).
3. **கிணற்றண்டையில் சமாரியப் பெண்:** ''உன்னுடனே பேசுகிற நானே அவர்'' ஒரு மாபெரும் வெளிப்பாடு (யோவான் 4:10, 25, 26).

4. **சகேயு:** இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்க வகைதேடினான் (லூக்கா 19:1–10).

இ. இதன் அவசியத்தைப் பற்றி வேதத்தில் உள்ள சான்று :

1. யோவான் 20:31 .. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டுள்ளன.
2. அப்போஸ்தலர் 16:31 .. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது . . . . . இரட்சிக்கப்படுவாய்.
3. ரோமர் 10:9–10 .. கர்த்தராகிய இயேசுவை உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

**5. முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளுதல் :**

அ. இரட்சிப்பு ஒரு ஈவு என்பதை நினைவிற்கொள்க.

ஒரு ஈவை நாம் சம்பாதிக்கவோ, பணம் கொடுத்து வாங்கவோ அல்லது உரிமை பாராட்டி பறித்துக்கொள்ளவோ முடியாது. அது ஏற்றுக் கொள்ளப்பட மட்டும்தான் முடியும் (ரோமர் 6:23; யோவான் 10:28).

ஆ. இரட்சிக்கப்பட இரண்டு காரியங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் :

1. தேவனுடைய வார்த்தையை (கிறிஸ்துவின் நற்செய்தி) ஏற்றுக் கொள்ளுதல்

அ. இவை பிரசங்கிக்கப்படும்போது .. (1 கொரிந்தியர் 1:21; அப்போஸ்தலர் 2:41).

ஆ. இவை வெளிப்படுத்தப்படும்போது .. (மாற்கு 4:20; ரோமர் 10:17).

**குறிப்பு :**

தேவனுடைய வார்த்தைகளின் மூலம் நாம் மறுபடியும் பிறக்கிறோம் (1 பேதுரு 1:22, 23). தேவனுடைய வசனத்தைக் கேட்டு விசுவாசிப்பதால் நித்திய ஜீவனை நாம் பெறுகிறோம் (யோவான் 5:24).

2. ஜீவ வார்த்தையாகிய கிறிஸ்துவையே ஏற்றுக்கொள்ள வேண்டும் (யோவான் 1:1, 12).

இ. நாம் தேவனுடைய வார்த்தையாகிய செய்தியை விசுவாசத்தினாலே ஏற்றுக் கொள்ளும்போது ஜீவ வார்த்தையாகிய அவரே நம் உள்ளத்தில் வருகிறார் (வெளி.3:20).

ஒருவன் என் சத்தத்தைக் (வார்த்தையை) கேட்டு கதவைத் திறந்தால் (விசுவாசித்தால்) நான் அவனிடத்தில் பிரவேசிப்பேன். (ஜீவவார்த்தை அல்லது கிறிஸ்துவே உள்ளத்திற்குள் வருகிறார்).

**6. முற்றிலும் சார்ந்துகொள்ளுதல் :**

அ. நீ எதைச் சார்ந்திருக்கிறாய் என்பதைவிட உன் மதம் பெரியது அல்ல. நீ பரலோகம் சென்றடைவதற்கு எதைச் சார்ந்து அல்லது ஆதாரமாகக் கொண்டிருக்கிறாய்?

ஆ. சிலர் சார்ந்திருப்பவை : ‘‘ஞானஸ்நானம், நற்கிரியை, சபை உறுப்பினராகுதல், நல்லொழுக்கம், உண்மை போன்றவை.’’

இ. நாம் நம்முடைய இரட்சிப்பைக் குறித்து நிச்சயம் உடையவர்களாயிருக்க, வலிமையான தூண்களைப் போன்ற இரண்டு சத்தியங்களை நாம் முற்றிலும் சார்ந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்மில் அநேகர் நிற்பதற்கு இரண்டு உறுதியான கால்களைப் பெற்றிருப்பதுபோல தேவன் நாம் சார்ந்து கொள்ளத்தக்க சத்தியமாகிய இரு உறுதியான கால்கள் அல்லது தூண்களைத் தந்திருக்கிறார்.

1. **முழுமையாக முற்றுப்பெற்ற சத்தியமான வேதம் :**

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றன. அதன்மேல் நாம் தைரியமாக நிற்கலாம். தேவன் ஒன்றைச் சொல்லியிருப்பாரானால் அதை விசுவாசி. அதுவே நிலைபெறட்டும்!

அவரை அப்படியே அவர் வார்தையின்படி அங்கீகரித்து, அவர் வாக்கின்மேல் அப்படியே சார்ந்து ‘‘ஆண்டவர் இப்படிச் சொல்கிறார்’’ என்பதை அப்படியே அறிந்து, இயேசுவில் நம்பிக்கையாயிருப்பது இன்பமானது.

2. **முழுமையாக முற்றுப்பெற்ற கிறிஸ்துவின் கிரியை :**

‘முடிந்தது’ என்று இயேசு சொன்னார் (யோவான் 19:30).

நியாயப்பிரமாணம் காக்கப்பட்டு, மேன்மைப்படுத்தப்பட்டது. பிசாசின் வல்லமை நசுக்கப்பட்டது. பாவக்கடன் செலுத்தி தீர்க்கப்பட்டு, நீக்கப்பட்டது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறைவாக்கப்பட்டு, அவருடைய பரிசுத்தம் நிலைநாட்டப்பட்டது. நம்முடைய மீட்பு முழுமைபெற்றது. இப்பொழுது வந்து, இந்த மகத்தான கிரியையின்மேல்

சார்ந்து இளைப்பாறு. என் நம்பிக்கை, சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம், அவரால் சம்பாதிக்கப்பட்ட நீதி, இதைத்தவிர வேறொன்றின்மேலும் கட்டப்படவில்லை.

**முடிவுரை :**

எனவே, நாம் பரிசுத்த தேவனின் பார்வையில் எப்படிக் காணப்படுகிறோமோ, அந்த உண்மைநிலையை அப்படியே மறுப்பின்றி ஒப்புக்கொண்டு, நம் பாவத்தைவிட்டு தேவனிடம் மனந்திரும்பி, நம்மையே நாம் இரட்சித்துக்கொள்ள திராணியற்றவர்கள், கிறிஸ்து ஒருவரே நம்மை இரட்சிக்க முடியும் என்பதை மனதார உணர்ந்து, கிறிஸ்துவின் தெய்வத்துவம், கர்த்தத்துவம், இவற்றை பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்த இடம் தந்து, அவருடைய வார்த்தையை அல்லது கிறிஸ்துவைப்பற்றிய செய்தியை விசுவாசித்து, கிறிஸ்துவை முழுமனதுடன் நம் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளும்போது முடிவான, சத்தியமான கிறிஸ்துவின் வாக்கையும், அவர் நமக்காக செய்து முடித்த கிரியையையும் முழுமையாக சார்ந்து கொள்ளுகிறோம். இதுவே ''இரட்சிப்பின் வழியாகும்.''

நீங்கள் இதுவரை இவ்வாறு செய்யவில்லையென்றால், மனந்திரும்பி, கிறிஸ்துவை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, அவரை உங்கள் வாழ்க்கையின் ஆண்டவராகவும் இரட்சகராகவும் அறிக்கை செய்ய இதுவே தக்க சமயம்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# இரட்சிப்பின் வழி

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. ஆவிக்குரிய காரியங்களில் மக்களைக் குருடாக்கி வைத்திருப்பது யார் ?

   a. தேவன் b. கள்ளப் போதகர்கள் c. சாத்தான்

2. மனந்திரும்புதலில் நமது மூன்று தன்மைகள் இடம் பெற்றுள்ளது

   a. மனம், உணர்ச்சி, சித்தம்

   b. கேட்பது, மனது, கண்கள்

   c. சித்தம், உணர்வு, கேட்பது

3. பாடத்தின்படி, பழைய ஏற்பாட்டில் எந்த மூன்று மனிதர்கள் தங்களைப் பாவிகள் என்று கண்டார்கள் ? **(மூன்றை வட்டமிடவும்)**

   a. தாவீது b. ஆபிரகாம்

   c. ஏசாயா d. ஆமோஸ்

   e. எசேக்கியா f. எரேமியா

4. ஒரு மனிதன் தான் இரட்சிக்கப்படுவதற்கு சில விதிமுறைகளை கைக்கொண்டால் போதுமானதா ?

   a. போதுமானது b. இல்லை

5. தேவனின் வார்த்தை மக்களின் இருதயங்களைக் குறித்து கூறுவது என்ன ?

   a. நல்லதும் மரியாதைக்குரியதாயிருக்கிறது

   b. திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது

   c. எப்பொழுதும் தேவனைத் தொழுது கொண்டிருக்கிறது

6. மனந்திரும்ப வேண்டிய மக்கள் யார் ?

   a. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் மட்டும்

   b. பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த மக்கள் மட்டும்

   c. எல்லா மனுஷரும்

7. உண்மையான மனமாற்றம் காணப்படுவது எப்பொழுது ?

   a. ஒரு நபர் சபையில் அதிகமாக அழுவது

   b. ஒரு நபர் தான் மறுபடியும் பாவம் செய்ய மாட்டேன் என்று சொல்லுவது

   c. ஒரு நபர் தான் பாவி என்பதை உணர்ந்து கிறிஸ்துவண்டை மனந்திரும்பி வரும்பொழுது

8. தெசலோனிக்கேயா பட்டணத்தில் உள்ள மக்கள் தங்களது மனந்திரும்புதலை எப்படி வெளிப்படுத்தினர் ?

   a. விக்கிரகங்களை வணங்குவதை விட்டு, ஜீவனுள்ள தேவனை ஆராதிக்க தொடங்கினர்

   b. பட்டணத்திலிருந்த அனைத்து கோவில்களையும் அழித்தனர்

   c. புறஜாதி பாடல்களுக்குப் பதிலாக கிறிஸ்தவ பாடல்களை பாடினர்

**9.** பேதுரு கிறிஸ்துவை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ததின் காரணம் என்ன ?

a. சீஷர்கள் அவ்விதமாக சொல்ல சொன்னார்கள்

b. இயேசுவானவர் அநேக அற்புதங்கள் செய்ததை அவர் பார்த்தார்

c. இயேசுவானவர் யார் என்பதை அவருக்கு பிதா வெளிப்படுத்தியிருந்தார்

**10.** பாவிகளுக்கு கிறிஸ்துவை வெளிப்படுத்த இன்றைக்கு தேவன் எதை பயன்படுத்துகிறார் ?

a. வேதாகமம் b. நல்ல வீடியோ படங்கள் c. மனச்சாட்சி

**11.** இன்றைக்கு விசுவாசி சார்ந்திருக்க வேண்டிய மிகப் பெரிய தூண்கள் எவை ? **(இரண்டை வட்டமிடவும்)**

a. முழுமையாக முற்றுப்பெற்ற கிறிஸ்துவின் கிரியை

b. கிறிஸ்து செய்த அற்புதங்கள்

c. முற்றுப்பெற்ற சத்தியமான வேதம்

d. வேதாகமத்தைக் குறித்த நல்ல புத்தகங்கள்

**12.** கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நபர் தான் இரட்சிக்கப்பட்டிக்கிறார் என்பதை அறிந்திருக்கிறார். காரணம்

a. அவர் தன்னைக் குறித்து நன்றாக எண்ணிக் கொள்கிறார்

b. வேதாகமம் அவ்விதமாக கூறுகிறது (யோவான் **1:12,13**)

c. அவர் தனது வாழ்க்கையில் உணருகிறார்

**13.** ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு எந்த இரண்டு காரியங்கள் தேவைப்படுகிறது ?

a. மனந்திரும்புதலும், விசுவாசமும்

b. விசுவாசமும், கிறிஸ்துவில் வைக்கும் நம்பிக்கையும்

c. பெரிய துக்கமும், அழுகையும்

**14.** நாம் அனைவரும் எப்படிப்பட்டவர்கள் என்று வேதாகமம் போதிக்கிறது ?

a. ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டவர்கள்

b. சிறிதளவு தெய்வத்தன்மை கொண்டவர்கள்

c. தேவனின் நல்ல நண்பர்கள்

**15.** பேதுரு யூதர்களை மனந்திரும்ப சொன்னபோது, அவர்களின் எந்த நிலையை குறிப்பிடுகிறார் ?

a. மனம் அல்லது அறிவாற்றல்

b. உணர்வு

c. சித்தம்

**16.** மனந்திரும்புதல் நம்மில் எந்த வழிகளில் ஏற்படுகிறது ? ( ஏதேனும் **மூன்றை எழுதுக)**

a. --------------------------------

b. --------------------------------

c. --------------------------------

17. கிறிஸ்தவனாக நீங்கள் மாற விரும்பினால், இந்த மூன்று காரியங்களில் எதை செய்ய வேண்டும் ?

    a. தேவனுடைய வார்த்தையை நம்பி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டும்

    b. ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்

    c. சபையில் சேர வேண்டும்

18. **நிரப்புக :** மனந்திரும்புதல் என்ற வார்த்தையின் அடிப்படை கருத்து என்ன ?

    ---------------------------------------------------------------------------------

19. ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு தான் ஒரு ------------------------ என்பதை மறுப்பின்றி ஒப்புக்கொண்டு, தேவனுடைய ----------------------முழுமையாக சார்ந்து கொள்ள வேண்டும்.

20. இரட்சிப்பு ---------------------- கிருபையின் மூலமாகவும் ---------------------- வைக்கும் நம்பிக்கையின் மூலமாகவும் வருகிறது

21. இந்த பாடத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள இரட்சிப்பின் 6 படிகளை எழுதவும் :–

    1. -----------------------------------------------
    2. -----------------------------------------------
    3. -----------------------------------------------
    4. -----------------------------------------------
    5. -----------------------------------------------
    6. -----------------------------------------------

| |
|---|
| நீங்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவர்களாயிருந்தால், இரட்சிக்கப்பட்ட அனுபவத்தை பின்பக்கம் எழுதவும் |

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ________________________________________________

முகவரி : ________________________________________________

________________________________________________